5. அரசினர் தனித் தீர்மானம்

சட்டமன்ற மேலவையை மீண்டும் கொண்டு வருவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிப்பது குறித்து அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கலாம் என்றும், அதற்குரிய சட்டத்தினை, அந்தச் சட்டத்தில் வகைமுறைகளுக்குச் செயல் விளைவு அளிக்கத் தேவைப்படுகிற அரசமைப்பின் திருத்தத்திற்கான வகைமுறைகளையும் மற்றும் நாடாளுமன்றம் தேவையெனக் கருதலாகும் நிறைவுறு. இடைவுறு மற்றும் விளைவுறு வகைமுறைகளையும் உள்ளடக்கிய வகையில், இந்திய அரசமைப்பின் 169-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின்கீழ் நிறைவேற்றலாம் என்றும் இந்தப் பேரவை தீர்மானிக்கின்றது என்று இந்தத் தீர்மானத்தை பேரவையிலே முன்மொழிகிறேன்.

தமிழகத்திலே மிகச் சிறப்புற நடைபெற்று வந்த பெரும் மேதைகளுடைய கருத்துரைகளை, அறிவுரைகளை, ஆலோசனைகளை எல்லாம் பெற்று இயங்கி வந்த சட்டமன்ற மேலவை 14-5-1986-ஆம் நாளைய அரசினர் தனித் தீர்மானம் ஒன்றின் வாயிலாகக் கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு 1989-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் நாள் மேலவையை மீண்டும் தோற்றுவிக்கின்ற தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. அங்கே சற்று காலந்தாழ்ந்தது மாத்திரமல்ல, இந்தத் தீர்மானத்திற்கான ஒப்புதல் வழங்குவதற்கு முன்பு அரசு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் மாறிவிட்ட காரணத்தால் இந்தத் தீர்மானம் உயிர்பெறாமல் இருந்தது. அப்படியிருந்த தீர்மானத்தை 1991-ஆம் ஆண்டு இங்கே ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் 4-10-1991-ஆம் நாளன்று மேலவை தேவை என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நீக்கிக் கொள்வது என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்து அதை நிறைவேற்றினார்கள். எனவே, தமிழகத்திலே உள்ள, இந்த மாநிலத்திலுள்ள பல்வேறு பிரிவினர்கள் இந்த அவையிலே இடம் பெற்றிருக்கின்றவர்கள் அன்னியில், இடம் பெற்று தங்கள் சார்பாக,

தங்களுடைய பிரிவுகளின் சார்பாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டிய பலர் இடம் பெறமுடியாத ஒரு சூழ்நிலை, அவர்களுடைய அரிய யோசனையை அரசு கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை எண்ணிப் பார்த்து மீண்டும் மேலவைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றேன். இதைப்பற்றி அவையிலே உள்ள மற்ற கட்சிகளின் சார்பில் கருத்துக்கள் கூறப்பட்ட பிறகு என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறலாம் என்றுரைத்து இந்த அளவில் அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சொக்கர்:

முற்பகல் 10-00

* **திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்திற்கு வலிமைச் சேர்க்கின்ற ஓர் அங்கமாகத் திகழக்கூடிய இந்த மேலவையை மீண்டும் கொண்டு வருவதற்கான வழிவகை செய்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அதனை வரவேற்று என்னுடைய கருத்தினை எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன். நமது ஜனநாயக ஆட்சி முறை, சட்டம் இயற்றுதல்-Legislation, சட்டத்தினை அமல்படுத்துதல்-Executive, சட்டத்தினை நீதி பரிபாலனம் செய்தல்-Judiciary என்ற மூன்று அங்கங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும், சட்டம் இயற்றுதல் என்ற ஒரு பிரிவுக்குத்தான் ஜனநாயகத்தில் அதிகப்படியான முக்கியத்துவம் தரப்படுகின்றது. அதற்குக் காரணம், சட்டம் இயற்றுதல் என்ற பிரிவுக்கு உட்பட்டு, சட்டமன்ற, நாடளுமன்ற உறுப்பினர்கள்தான் ஒரு ஜனநாயக அமைப்பில் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மக்களை மீண்டும் சந்தித்து அவர்கள் இருக்கின்ற பொறுப்பில் தொடர்ந்து இருக்கலாமா, வேண்டாமா என்று ஜனநாயகத்தில் மக்களுடைய ஒப்புதலைப் பெறக்கூடிய காரணத்தால்தான் Executive-வில் இருக்கக்கூடிய உயர் அதிகாரிகளான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஐ.பி.எஸ். அதிகாரிகளாக இருந்தாலும் சரி, நீதி பரிபாலனம் செய்யக்கூடிய நீதிபதிகளாக இருந்தாலும் சரி, ஒரு ஜனநாயக அமைப்பில் 'சட்டம் இயற்றுதல்' என்று பிரிவுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் தரப்படுகின்றது.

1996 ஜுலை 26] [திரு. ஆர். சொக்கர்]

நம்மை முன்பு சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டு கொண்டிருந்த வெள்ளையர்களை விரட்ட எவ்வளவோ அரும்பாடுபட்டோம் ஆனால், கொள்ளையர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவார்களேயானால், அவர்களை ஐந்தே ஆண்டுகளில்கூட விரட்ட முடியும். அதுவும் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை வாக்குச்சாவடிகளில் மௌனப் புரட்சியின் மூலம் வெளியேற்றிவிட முடியும் என்ற ஒரு நிலையைத்தான் இந்த ஜனநாயக அமைப்பு நமக்கு நல்கியிருக்கிறது அப்படிப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பிலே நாம் வாழக்கூடிய ஒரு பேறு பெற்றமைக்கு நாமெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அடையலாம். பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இந்த ஜனநாயக அமைப்பு ஏதோ ஒரு நாள். ஒரு சிலர் கூடி, ஒரே நேரத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு அல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறே உண்டு. முதன்முதலாக உலக நாடுகளிலே இருந்த வலுவான ஜனநாயகத்தைப்பற்றி பார்ப்போமேயானால் கிரேக்க நாட்டிலே இருந்த ஜனநாயகதத்தைத்தான் சொல்ல வேண்டும். அதாவது கி.மு.582-ஆம் ஆண்டு, இன்றிலிருந்து சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பாக, கிரேக்க நாட்டிலே, ஏதென்ஸ் நகரத்திலே மன்னர் ஆட்சி முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 3 பேர்களைக் கொண்டு ஆட்சி அமைக்கக்கூடிய ஜனநாயக முறை நிறுவப்பட்டது. அந்தக் காலத்திலேகூட ஒரு விந்தையான சட்டம் இருந்ததைப் பார்த்து நான் மிகவும் பெருமைப்பட்டு பூரித்துப்போனேன். அது என்ன சட்டம் என்றால், பொது வாழ்க்கையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் தவறு செய்வார்களேயானால், மிகப் பெரிய தவறு செய்வார்களேயானால், மக்களுடைய மிகப் பெரிய அதிருப்திக்கு ஆளாகக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டு, 10 ஆண்டுகள் வரை வாக்கெடுப்பின் மூலம் அவர்களை நாடு கடத்தக்கூடிய சட்டத்தை அந்த ஏதென்ஸ் நகரத்தினுடைய ஜனநாயக அமைப்பு பெற்றிருந்தது. ஏதென்ஸ் மாநகரத்தில் உள்ள Greek Democracy என்று சொல்லக்கூடியதில் Democracy என்ற வார்த்தையே அங்கிருந்து வந்ததுதான் கிரேகத்தினுடைய இரண்டு சொற்களான Demos, Kratos என்ற கிரேக்க வார்த்தைகளிலிருந்து இன்றைய Democracy என்ற சொல்லே வந்தது. Demos என்றால் People, Kratos என்றால் Authority அல்லது Rule என்று பொருள்படக்கூடிய அளவிலே மக்களால் ஆட்சி அமைக்கக்கூடிய ஒரு முறையைக் குறிக்க Democracy என்ற சொல் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏற்படுத்தப்பட்ட சொல் ஆகும். அது இன்றும் நடைமுறையிலே இருந்து வருகின்றது.

முற்பகல் 10-05

இன்று நம் நாட்டிலே இருக்கக்கூடிய ஜனநாயக அமைப்புக்கு, ஜனநாயக உணர்வுகளுக்கு தாய் வீடாக நாம் இங்கிலாந்து நாட்டைத்தான் சொல்லவேண்டும். அந்த நாட்டில் தான் 1215-ஆம் ஆண்டு Magna Carta என்று சொல்லக்கூடிய, The Great Charter என்று சொல்லக்கூடிய ஒரு பிரகடனத்தை ஏற்படுத்தி, அன்று ஆண்டு கொண்டிருந்த ஜான் என்ற மன்னரிடம் சில உரிமைகளை அரசன் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு மிக முக்கியமாக கிறிஸ்துவ மதம் துணை புரிந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அது எப்படியென்றால், கிறிஸ்துவ மத போதகர்கள் தங்களுடைய வேதக் கோயில்களிலே அவர்களுடைய உபநிஷதங்களைச் சொல்லும்போது, 'கடவுளின் முன்னால் அனைவரும் சமம்' என்ற கருத்தையே மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள். அந்தக் கருத்துக்களை கேட்ட மக்களுக்கு, ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்றால் இந்த அரசனுக்கு இருக்கக்கூடிய அதிகமான அதிகாரங்களை நமக்குப் பகிர்ந்தளித்தால் என்ன என்ற உணர்வு அவர்கள் மனதிலே தோன்றியதன் காரணமாகத்தான் அன்று அந்த 'மேக்னா கார்டர்' (Magna Cartar) என்ற 'கிரேட் சார்ட்டரை' கிங் ஜானிடம் ஒப்படைத்தார்கள். அந்த 'மேக்னா கார்டர் மூலமாக அவர்கள் முதலில் பெற்ற உரிமைகள் பிரபுக்களுக்கு சாதகமாக அமைந்திருந்த போதிலும், பின்னால் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களிடமிருந்தும், அரசிடமிருந்தும் மக்கள் உரிமைகளைப் பெறுவதற்கு அந்த 'கிரேட் சார்ட்டர்' என்ற அந்த பிரகடனம் மிகவும் முன்னோடியாக இருந்தது அதன் பிறகு 1377 ஆம் ஆண்டு—அதுவரையிலும் இங்கிலாந்து தேசத்தில் பார்லிமெண்ட் என்ற ஒரே ஒரு அமைப்புதான் இருந்தது. அந்த அமைப்பு அதற்குப் பிறகு இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து செயல்படத் துவங்கியது. பிரிந்த அந்த இரண்டாவது பிரிவிற்கு 'ஹௌஸ் ஆஃப் லார்ட்ஸ்' என்று அவர்கள் பெயரிட்டார்கள். ஆங்கிலேயர்கள் அதற்குப் பின் இங்கு வந்த காலகட்டங்களிலே இந்தியாவை ஆண்ட காலத்திலே, இந்த 'பைகேமரல்' லெஜிஸ்லேசருடைய பல அனுகூலங்களைக் கண்டு, இந்தியாவிலே இந்த 'பைகேமரல் லெஜிஸ்லேசர்' என்ற முறையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தார்கள்.

இந்தியாவின் பரிணாம வளர்ச்சியைப் பார்த்தோமேயானால் 1833-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டமும் அதற்குப் பிறகு 1853-ஆம்

ஆண்டு இயற்றப்பட்ட சட்டமும், அதற்குப் பிறகு 1861-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டமும், அதற்குப் பிறகு 1892-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டங்களும்தான் இந்தியாவிலே இந்தச் சட்டமன்றங்கள் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தன.

1892-ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையிலேதான், 17-1-1893 அன்று மாலை 3.00 மணியளவில் இதே செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் ஒரு மண்டபம் என்று குறிப்பிலே பார்த்தேன். மண்டபம் என்றால் இதே மண்டபத்தினைக் குறித்தார்களா அல்லது இந்தக் கட்டிடத்திலே வேறு ஒரு மண்டபம் இருந்ததா என்பது எனக்குத் தெரியவில்லை. மற்ற உறுப்பினர்கள் பேசும்போது அதைச் சொன்னால், தெரிந்து கொள்ளும் வாய்ப்பினை நான் பெற்றவனாவேன். ஆகவே, 1893-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் நாள் மாலை 3.00 மணியளவில் அமைக்கப்பட்ட இந்தச் சட்டமன்றம் இன்று வரையிலும் பல ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்து, சிறப்பாக நடைபெறுகிறது என்றால், அதனுடைய பரிணாம வளர்ச்சியை, பாரம்பரியத்தைப் பார்த்து நிச்சயமாக நாமெல்லாம் பெருமைப்படலாம். அதன்பிறகு 1909-ஆம் ஆண்டு மின்டோ-மார்லி சீர்திருத்தம். 1919 ஆம் ஆண்டு மாண்டேகு செமஸ்போர்டு சீர்திருத்தம், அதன் மூலமாக 1921-ஆம் ஆண்டு 'டயார்க்கி' முறை, இரட்டை ஆட்சி முறை இங்கே அமுல்படுத்திப்பட்டது என்பதை ஆளுநர் உரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நேரத்திலே குறிப்பிட்டது எனக்கு இன்னும் நினைவில் இருக்கிறது. அதன் பிறகு 1935-ஆம் ஆண்டு வந்த சட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்த சட்டம், அதுவரையிலும் சட்டமன்றம் ஒரு சபையாக இயங்கிவந்தது. இந்தச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு 1935-ஆம் ஆண்டு முதல் அந்தச் சட்டத்தின்படி இரண்டு அமைப்புகளாகப் பிரிந்தது. அப்படி இரண்டு சபைகளாகப் பிரியும்போது, தமிழகத்திலே மேல்சபை என்றும், கீழ்சபை என்றும் அல்லது 'லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி' என்றும் 'லெஜிஸ்லேடிவ் கவுன்சில்' என்றும் இரண்டு சபைகளாக வந்தது. இந்தியாவில் பிற மாநிலங்களில் அது அமைக்கப்படவில்லை. அது அவரவர்களுடைய, அந்தந்த மாநிலத்தினுடைய விருப்பத்திற்கு விடப்பட்டது. சுதந்திரம் பெற்ற போதும்கூட, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி பார்லிமெண்டில் மேல்சபை, கீழ்சபை என்ற இரு சபைகளாக கண்டிப்பாக இருக்க . வேண்டும், ஆனால் சட்டமன்றங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநிலங்கள் இது குறித்து முடிவு செய்யலாம் என்று அவற்றினுடைய முடிவுக்கு விடப்பட்டது. தேவையென்றால் மேலவையை வைத்துக் கொள்ளலாம், இல்லையென்றால் விட்டு

விடலாம் என்ற அடிப்படையிலே அந்தச் சட்டம் இருந்தது. இப்போது மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது பல மாநிலங்களிலே சர்ச்சைக்குரிய விவாதமாக பல காலகட்டங்களில் இருந்து வந்திருக்கிறது.

முற்பகல்10-10

எங்களைப் பொறுத்தவரையில் கீழ்சபை என்பது முழுக்க முழுக்க அரசியல் கட்சிகளைச் சார்ந்த, அரசியல் அடிப்படையிலே உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடம் சட்டம் இயற்றக்கூடிய முழுமையான அதிகாரம், நூற்றுக்கு நூறு அதிகாரம் விடப்படுமானால், சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டு அல்லது சுயநல அரசியல் காரணங்களுக்காக இங்கே தவறான சட்டங்கள் இயற்றப்பட்டுவிடுமோ என்ற ஒரு எச்சரிக்கையின் காரணமாக, அவர்கள் ஒருவேளை தவறான பாதையில் சென்றால் அதைச் சுட்டிக்காட்டி, மறுபடியும் சிந்தித்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதற்காக, அறிஞர் பெருமக்கள் அடங்கிய இன்னொரு சபையும் தேவை என்பதைத்தான் நம்முடைய அரசியல் சட்டம் இயற்றிய பெரியவர்கள் நினைத்திருக்க வேண்டும். ஆகவே, ஏதோ ஒரு வேகத்தில் ஒரு சட்டமுன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்டாலும்கூட அது மேலவைக்குச் சென்றுவரக்கூடிய நேரத்திற்குள், அவர்கள் ஆலோசனை சொல்லாமல் இருந்தாலும்கூட, ஏதோ அவசரப்பட்டு அன்று சொல்லிவிட்டோம், மறுபடியும் சிந்தித்துக் கொள்ள நேரம் இருக்கின்றது என்று நாமே தீர்த்துக் கொள்ளலாம். அல்லது அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு அந்தச் சட்டத்திலே பல திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் வாய்ப்பு இருக்கும், அந்த அடிப்படையிலேதான் தமிழகத்திலேயிருந்த மேலவை செயல்பட்ட காலங்களிலே, இந்த அசெம்பிளியிலேயிருந்து அனுப்பப்பட்ட சட்டங்களில், 14 முறை தன்னுடைய கருத்துக்களை, திருத்தங்களைக் கூறியிருக்கிறது. அப்படி 14 முறை கருத்துக்களையும் திருத்தங்களையும் கூறியபோது, இந்த சபை அதில் 12 முறை அதனுடைய கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது அந்த சபை எவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்த சபையாக, இந்த சபைக்கு உதவி செய்யக்கூடிய சபையாக, உறுதுணையாக இருக்கின்ற ஒரு சபையாக இருந்திருக்கிறது என்பதை நாம் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இதுவும், நீங்கலாக, மேல்சபையிலே கூட சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படலாம். அது இருந்த வரையிலும், தமிழக சட்டமன்றத்தின் மேல் சபையில் 23 சட்டமுன்வடிவுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தனியார் விரும்பினாலும்கூட அங்கே சட்டமுன்வடிவுகளைக் கொண்டு

1996 ஜூலை 26] [திரு. ஆர். சொக்கர்]

வரலாம் என்று இருக்கிறது. அங்கே இரண்டு சட்டமுன்வடிவுகள் தனியாரால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலே மிக முக்கியமாக நான் கருதுவது, மறைந்த டாக்டர் ஏ.எல் முதலியார் அவர்கள் ஒரு சட்டமுன் வடிவு கொண்டு வந்தார். Parks, Play fields and Open Spaces, Protection Act என்ற ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒரு தீர்க்க தரிசனத்தோடு அன்று அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய காரணத்தினால்தான், இன்று பெரிய நகரங்களிலும், சரி, சிறிய நகரங்களிலும் சரி, சில திறந்த வெளிகளையும், பூங்காக்களையும் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்க முடிகிறது. இன்று திறந்தவெளியாக இருந்தாலும் சரி, பூங்காக்களாக இருந்தாலும் சரி, அரசே நினைத்தாலும் அதில் எந்தவிதமான கட்டிடத்தையும் கட்டுவதற்கு அந்தச் சட்டம் தடை செய்திருக்கிறது. இதுபோன்ற சிறந்த சட்டங்களை அரசியலுக்குச் சம்பந்தம் இல்லாத சட்டங்களை, தனி நபர்கள், அறிஞர்கள் கொண்டுவரவேண்டுமென்று விரும்பினால், அதற்கு மேலவை மிகச் சிறந்த ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

இன்னொரு குறிப்பு, இவ்வளவு சிறந்த மேலவை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 1986-ஆம் ஆண்டு வேண்டாம் என்று ஏன் தீர்மானிக்கப்பட்டது? அன்றிருந்த சூழ்நிலைகள் என்ன என்பதை, அதை அறிந்த உறுப்பினர்களோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையின்போதோ இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இதை அரசியல் நோக்கத்திற்காகச் சொல்கிறேன் என்று கருதாமல், இன்று நாம் வாழ்கின்றோம், நாம் வாழக்கூடிய நேரத்திலே இந்த ஜனநாயக உணர்வுகளை, ஜனநாயகத் தத்துவங்களை எந்த அளவிற்கு நாம் மதித்து வாழ்ந்தோம், ஜனநாயகத்தைக் காப்பதற்காக நாம் எந்த அளவிற்கு முயற்சிகளை எடுத்துக் கொண்டோம் என்பதை அறிவதற்காக, இன்னும் 100 ஆண்டுகள் கழித்தோ அல்லது 200 ஆண்டுகள் கழித்தோ நம் சந்ததியினர் இந்தச் சரித்திரத்தைப் படித்துப் பார்ப்பார்கள். அப்படி படித்துப் பார்க்கும்போது என்ன காரணத்திற்காக ஒரு ஜனநாயக அமைப்பு சீரழிக்கப்பட்டது. எந்தச் சூழ்நிலையில் அது மீண்டும் அமல்படுத்தப்பட்டது என்ற வரலாறு அவர்களுக்குத் தெரியவேண்டும். ஆகவே, நடந்த உண்மைகளை அரசியல் கலப்பில்லாமல், பின்னால் வரக்கூடிய சந்ததியினர்கள் இந்தச் சரித்திரத்தைத் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிலே இந்த உண்மைகளெல்லாம் இந்த அவையிலே இடம் பெறவேண்டும். அதற்கு மாறுபட்ட கருத்துக்கள்

[திரு. ஆர். சொக்கர்] [1996 ஜூலை 26

இருக்குமேயானால், மற்ற உறுப்பினர்களும் சொல்லட்டும். அந்தக் கருத்துக்களும் அவைக் குறிப்பில் ஏறட்டும், இந்தக் கருத்துக்களும் ஏறட்டும் என்ற ஒரு குறிப்பினை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, இதிலே எனக்கு ஒரு சந்தேகம் என்னவென்றால், எனக்கெல்லாம் அவ்வளவு அனுபவம் கிடையாது. என்னுடைய வயதைவிட பொது வாழ்க்கையில் கூடுதலான அனுபவம் பெற்றவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-15

இங்கே சட்டமுன்வடிவை ஏற்பது, அது மேலவைக்குச் செல்வது, அங்கே திருத்தங்களைப் பெறுவது, திரும்ப வருவது நிறைவேற்றப்படுவது, இது எனக்குச் சரியாகப் புரியவில்லை; ஆகவே, ஒரு உதாரணத்தைச் சொல்லி, நான் நினைப்பது சரிதானா என்பதை உங்களுடைய பதிலுரையில் சொன்னால் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், இங்கே பட்ஜெட் கூட்டத்தொடரில் பேசிய சற்றொப்ப அனைத்து உறுப்பினர்களும், கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த தவறுகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள் கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் வந்துசேர வேண்டுமென்று சொன்னார்கள். மார்க்ஸீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மாண்புமிகு திரு.மணி அவர்கள் உணர்வுபூர்வமாகச் சொன்னார்கள். மக்களுடைய வரிப்பணம், நம்முடைய வரிப்பணம் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. அதை திரும்பவும் அரசுக்குக் கொண்டு வரவேண்டும். சொல்லிக்கொண்டே இருப்பதால், என்ன பயன்? எப்படிக் கொண்டு வருவது என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த கூட்டத் தொடரில் ஒரு நாள் முதலமைச்சர் அவர்கள், அன்று டெல்லி செல்லவிருந்தார்கள். அன்று Benami Transaction Prohibition Act, என்று 'சென்ட்ரல் ஆக்ட்' இருக்கிறது என்றார். அதன்மூலமாக, வாங்கிய சொத்துக்களை, பினாமி பெயர்களிலே அவர்கள் பதிவு செய்திருந்தால் அவற்றை எடுத்துக் கொள்ளச் சட்டம் இருக்கிறது. ஆனால் வாங்கிய சொத்துக்களை தன்னுடைய பெயரிலோ, உறவினர் பெயரிலோ, மற்றவர்கள் பெயரிலோ, நண்பர்கள் பெயரிலோ வைத்திருந்தால், அவற்றை எப்படி எடுப்பது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறபோது நீங்கள் பதில் சொல்லலாம்.

1996 ஜூலை 26]

திரு. ஆர். சொக்கர்: நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நான் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இரண்டு பேர்களுக்கு மட்டும் கோபம் வருகிறது என்றால், அது என்னவென்று எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) யார் தவறு செய்திருந்தாலும், (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைப் பற்றிச் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வரும் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டு பேரும் உட்கார வேண்டும் உங்களுக்கு வாய்ப்பு வருகிறபோது, நீங்கள் பேசுங்கள், நான் அனுமதிக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: அதே மாதிரி அவர் பேசிக் கொண்டிருந்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் இதைமாதிரி பேசுங்கள் முறையாக பேசினீர்கள் என்றால், அனுமதிப்பேன்.

திரு. இரா. தாமரைக்கனி: இப்போது அவர் முறையாகப் பேசுவதால், நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் முறையாகத்தான் பேசுகிறார். அவர் பேசுவது முறைதான் என்று நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஆளுங்கட்சிக்குச் சாதமாகப் பேசினால், அது முறையா? அது எப்படி நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் தவறு செய்திருந்தாலும், பொதுச் சொத்துக்களை, மக்களுடைய வரிப்பணத்தை யார் கொள்ளையடித்திருந்தாலும், தவறான வழிமுறைகளில் பணத்தைச் சம்பாத்தித்து, சொத்துக்களை வாங்கியிருந்தால், அவற்றை எப்படித் திரும்பப் பெறுவது என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை. ஆகவே, இந்த மேலவை வரும்போது இங்கே புதிதாக ஒரு சட்டம் இயற்றுவோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த உதாரணத்திற்கு வருகிறேன். அந்தச்

சட்டம் ``Confiscation of ill-gotten wealth of Politicians and Public Servants Act" என்ற ஒரு சட்டத்தை, சட்டமுன்வடிவாக இங்கே கொண்டு வருவோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சட்டத்தின் மூலமாக தவறான வழிகளில் பணத்தைச் சம்பாதித்து அதன் மூலமாக அந்தச் சொத்துக்களைச் சேர்த்த அரசியல்வாதிகளிடமிருந்தும், அதிகாரிகளிடமிருந்தும் அந்தச் சொத்துக்களை அரசாங்கம் கையகப்படுத்துவதற்கான ஒரு சட்டத்தை இங்கே நாம் முன்வடிவாகக் கொண்டு வருவோமென்று வைத்துக் கொள்வோம். அந்தச் சட்டத்தை, மேலவை வந்துவிட்டால், நாம் அங்கே அனுப்புவோம். அதிலே, அவர்கள் திருத்தங்களைச் சொல்லலாம். ஒருவேளை திருத்தங்களை, அது பினாமி பெயரில் இருந்தாலும் சரி, அல்லது 'பவர் ஆப் அட்டர்னி' வாங்கி வைத்திருந்து, இன்னும் சொத்துக்களை மற்றவர்கள் பெயருக்கு மாற்றாமல் இருந்தாலும் சரி, அல்லது அப்படி தவறான வருமானத்தின் மூலமாக சொத்துக்களை வாங்கும்போது, நண்பர்கள் பெயரிலோ, உறவினர்கள் பெயரிலோ அல்லது மற்றவர்கள் பெயரிலோ வாங்கியிருந்தாலும் சரி, அவ்வாறு திருத்தங்களைக் கொண்டு வருவார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தத் திருத்தம் எப்படி வரும்? அந்தச் சட்டத்தை இங்கே எப்படி நிறைவேற்ற முடியும்? இதை நான் ஒரு உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன். அதைபோன்ற ஒரு சட்டத்தை இங்கே நாம் முன்வடிவு செய்து, அதனைக் கொண்டு வரும்போது என்னென்ன முறைகளெல்லாம் அங்கே கையாளப்படும் என்ற கருத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே சொன்னால் நாங்கள் பெருமைப்படுவோம். அதை மிக ஆவலோடு நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று கூறி இதனை ஆதரித்து முழுமனதோடு வரவேற்று, வாய்ப்பிற்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி. (குறுக்கீடு)

3. ஒழுங்குப் பிரச்சினை-தொடர்ச்சி

(ஆ) முந்தைய அரசு மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விவாதித்தல்

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரே ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.